
# அவரே தீர்வு




நம் வாழ்க்கையில் நமக்கு இருக்கும் எல்லா தேவைகளுக்கும், எல்லா நெருக்கங்களுக்கும், எல்லா உபத்திரவங்களுக்கும் அவரே (தேவனே) தீர்வு. நம் வாழ்க்கையில் நடைபெறும் நன்மையான காரியங்களானாலும், எதிர்மறையான காரியங்களானாலும், அவை யாவும் தேவனுடைய அனுமதி இல்லாமல், நம் வாழ்க்கையில் நடப்பதில்லை. இதை யோபு, தாவீது போன்றோர் நன்கு அறிந்திருந்தனர். எனவே தான் தங்களுக்கு நெருக்கங்கள் ஏற்பட்டபோது, ஒரு வேளை அது பிசாசினால் ஏற்பட்டபொழுதும், அதற்காக பிசாசு என் வாழ்க்கையில் இப்படி செய்து விட்டான் என்று கூறாமல், தங்கள் வாழ்க்கை எப்பொழுதும் தேவனுடைய கைகளிலேயே இருக்கிறது என்பதை அறிந்து, அதனால் தங்களுக்கு வந்த துன்பம் பிசாசினால் வந்தபொழுதும் அதற்கான தீர்வு தேவனிடத்திலேயே இருக்கிறது என்பதை உணர்ந்து, பிசாசை குறித்து அதிகம் பேசாமல் ஆண்டவரையே நோக்கி பார்த்து, தங்கள் துன்பத்தை வெளிப்படுத்தி அதற்கான தீர்வையும் பெற்று கொண்டனர்.

இங்கு நாம் கற்று கொள்ள வேண்டிய சத்தியம், நம் சிந்தை முழுவதும் தேவன் மேலேயே இருக்க வேண்டும் என்பதாகும். நன்னையானவைகள் போல தீமையான காரியங்களும் நம் வாழ்வில் மாறி மாறி வரத்தான் செய்யும். தேவ பிள்ளைகள், தேவன் எதற்காக தங்கள் வாழ்க்கையில் இந்த காரியத்தை அனுமதித்தார் என்பதை உணர்ந்து கொள்வர். துன்பத்திற்கு பாவம் காரணமெனில் அதை அறிக்கை செய்து சரி செய்ய முற்படுவர், ஒருவேளை துன்பம் ஏதோ ஒரு நோக்கத்திற்காக தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்குமானால், அதனை உணர்ந்து, தேவ சித்ததிற்கு தங்களை ஒப்புவித்து, உம் சித்தபடி ஆக கடவது, **"நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21)** என்பர்.

யோபுவின் வாழ்க்கையில் உண்டான சொல்லொணா துயரத்திற்கு அவரது பாவம் காரணம் இல்லை, அது திரைமறைவில் ஆண்டவருக்கும், பிசாசிற்கும் இடையேயான ஓர் காரியம். தேவன் பிசாசிடம் கூறியது ஒன்றே ஒன்று தான், நன்மைகளை அநுபவிக்கிற யோபு, தன் வாழ்க்கையில் தீமைகள் உண்டானாலும், அவருடைய கண்கள் ஆண்டவரை நோக்கியே இருக்குமே ஒழிய, துன்பங்கள் மீதோ,

பிசாசின் மீதோ போகாது என்பதாகும். அற்ப விசுவாசமுள்ளவர்கள், துன்பங்கள் உண்டானவுடனே பதற்றமடைந்து, தேவனை மறந்து, பிசாசு என் வாழ்வில் கிரியை செய்து என்னை அழித்துவிட்டான் என்று பிசாசிற்கு உயர்வை கொண்டு வரும் வகையில் அவர்களின் செயல்பாடுகள் இருக்கும்.

ஆனால் உண்மையாய் ஆண்டவரை நம்பி இருக்கும் ஒரு தேவ பிள்ளை, அழுதாலும் ஆண்டவரின் சமூகத்தில் தான் அழுவானே ஒழிய, பிசாசின் முன் கூனி குறுகி, தன் வேதனையை வெளிப்படுத்த மாட்டான். எளிதாக கூறவேண்டுமானால் பிசாசு என்ற வார்த்தை கூட அவன் வாயில் இருந்து வராது. இது ஏதோ அறியாமையினால் செய்கிற செயல் கிடையாது, பிசாசிற்கு பயந்து ஆண்டவரை நோக்கி கதறுவது கிடையாது, கோலியாத்தை போல பிசாசு எவ்வளவு பெரியவனாய் தனக்கு முன் நின்றாலும், தன்னோடு இருக்கிற தேவன் பெரியவர் என்பதை உணர்ந்தவனாய், பிசாசை ஒரு பொருட்டாகவே அவன் மதிப்பதில்லை.

நீ என்ன துன்பங்களை கொண்டு வந்து போட்டாலும், ஆண்டவர் தம் சித்தபடி அதை எப்பொழுது நீக்க நினைக்கிறாறோ அப்பொழுது அது மறைந்து விடும், எனவே என் பிரச்சனையை தேவ சமூகத்தில் வைத்து விட்டால் அது போதுமானது என்று கூறி ஒரு தேவ பிள்ளை வைத்துவிடுவான். பிசாசை எதிர்த்து போராட வேண்டிய போராட்டங்கள் நமக்கு உண்டு என்பதை வேதம் நமக்கு தெளிவாக கூறுகிறது. ஆனால் ஒருபோதும் அவன் வல்லமையை எண்ணி பயந்து என்ன செய்வது என்று தெரியாமல் தேவனிடம் கதறவோ, முறையிடவோ வேதம் கூறவில்லை. அதற்கு பதிலாக அவன் எதை கொண்டு வந்து நம் வாழ்வில் போட்டாலும் அவை எல்லாவற்றையும் தேவ ஒத்தாசையுடன் அமைதியாக கடந்து செல்வதே ஒரு நல்ல தேவ பிள்ளையிற்கு அழகாகும்.

மேற்கண்ட காரியங்களை இன்னும் தெளிவாக விளங்கிகொள்ள யோபுவின் வார்த்தைகள் சிலவற்றை பின்வருமாறு தியானிப்போம். **யோபு 16:11-22** வசனங்களில் **"தேவன் என்னை அநியாயக்காரன் வசமாக ஒப்புவித்து, துன்மார்க்கரின் கையில் என்னை அகப்படப்பண்ணினார். நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன்; அவர் என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்; என் ஈரலைத் தப்பவிடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார். நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை என்மேல் வரப்பண்ணினார்; பராக்கிரமசாலியைப்போல என்மேல் பாய்ந்தார். நான் இரட்டுச்சேலையைத் தைத்து, என் தோளின்மேல் போர்த்துக்கொண்டேன்; என் மகிமையைப் புழுதியிலே போட்டுவிட்டேன். அழுகிறதினால் என் முகம் அழுக்கடைந்தது; மரண இருள் என் கண்ணிமைகளின்மேல் உண்டாயிருக்கிறது. என் கைகளிலே கொடுமையில்லாதிருக்கையிலும், என் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், அப்படியாயிற்று. பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே; என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக. இப்போதும் இதோ, என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது, எனக்குச் சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார். என் சிநேகிதர் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்; என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது. ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறதுபோல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும். குறுகின வருஷங்களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பிவராத வழியே போவேன்."**, இங்கு **11ஆம் வசனத்தில்** தேவனே தன்னை அநியாயக்காரன் வசமாக ஒப்புவித்தார் என்று கூறுவது தேவனை குற்றப்படுத்த அல்ல. தேவ அனுமதியோடே தான் அநியாயக்காரன் வசம் ஒப்படைக்கபட்டிருக்கிறேன், ஆனால் எந்த பாடத்தை தான் கற்று கொள்ள தேவன் எதிர்பார்க்கிறாறோ, அதை தான் கற்றுக்கொண்டவுடன் தேவன் தன்னை விடுவிப்பார் என்ற விசுவாசத்திலேயே கூறுகிறார். **"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" (யோ 19:11)** என்று ஆண்டவர் பிலாத்துவிடம் தான் ஒப்புகொடுக்கப்பட்டிருக்கிறது தேவ சித்ததினாலேயே அன்றி மற்றபடியல்ல என்று கூறினார்.

யோபு கூறும் வார்த்தைகளில் நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன், நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை என் மேல் வரபண்ணி போன்ற வார்த்தைகள் அவருடைய துயரத்தின் நிலையை தெளிவாக நமக்கு கூறுகிறது. எப்படியோ இருந்த தன் வாழ்க்கை இப்படியாகிவிட்டதே என்பதை தெளிவாக கூறுகிறார். மேலும் **"என்**

கைகளிலே கொடுமையில்லாதிருக்கையிலும், என் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், அப்படியாயிற்று." (யோபு 16:17) என்றும் கூறுகிறார். எனவே தெளிவாக இது தன் பாவத்தினால் உண்டாகவில்லை என்பதை அவர் உணர்ந்துகொண்டார். ஆகிலும் தான் உத்தமன், நீதிமான் என்று கூறாமல் "இப்போதும் இதோ, என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது, எனக்குச் சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார்." (யோபு 16:19) என்று கூறி தேவனையே தனக்கு சாட்சியாக கூறுகிறார். ஆகிலும் இதை உணராத "என் சிநேகிதர் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்; என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது." (யோபு 16:20) என்கிறார். எனவே தன் துன்பத்தின் காரணத்தை புரிந்து கொள்ளாமல் அவருடைய சிநேகிதர்கள் பேசினதே அவருக்கு வருத்தத்தை கொடுத்தது. ஆகிலும் "ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறதுபோல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்." (யோபு 16:21) என்று கூறி முடிக்கிறார். ஒருவேளை யோபுவை போல நம் வாழ்விலும் துன்பங்கள் உண்டானாலும் நாம் மனம் தளராமல் அவர் கூறியதை போல எனக்காக சிநேகிதனை போல தேவனிடத்தில் யார் வழக்காடுவார் என்று கூட புலம்பாமல், நமக்காக பிதாவினிடத்தில் பறிந்து பேசும் ஒருவர் நமக்கு இருக்கிறார், "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." (யோ 15:13,15) என்ற தைரியத்தோடு பிசாசை எதிர்த்து துன்பங்களில் இருந்து விடுதலை பெறலாம்.

மேலும் யோபு 17:3 இல் "தேவரீர் என் காரியத்தை மேல்போட்டுக்கொண்டு, எனக்காகப் பிணைப்படுவீராக; வேறே யார் எனக்குக் கைகொடுக்கத்தக்கவர்?" என்று கூறுவது, "அவரே தீர்வு" என்பதை ஆழமாக அடித்து சொல்கிறது. யோபு 21:4 இல் "நான் மனுஷனைப்பார்த்தா அங்கலாய்க்கிறேன்? அப்படியானாலும் என் ஆவி விசனப்படாதிருக்குமா?" என்று கூறுகிறார். ஆம் அவர் எந்த மனுஷனிடத்திலும் தன் துன்பத்தை கூறி முறையிடவில்லை, அதற்கு தீர்வை தேடவில்லை. அதற்கு பதிலாக மற்ற மனிதர்களின் செயல்களே அவருக்கு துன்பத்தை தந்தது. யோபு 19:2 இல் "நீங்கள் எந்தமட்டும் என் ஆத்துமாவை வருத்தப்படுத்தி, வார்த்தைகளினால் என்னை நொறுக்குவீர்கள்?", என்று கேட்பதில் இருந்து விளங்குகிறது. மேலும் யோபு 19:17 இல் "என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது; என் கர்ப்பத்தின் பிள்ளைகளுக்காகப் பரிதபிக்கிறேன்.", என்று கூறுவது அவர் பட்ட வேதனையின் உச்ச கட்டத்தை நமக்கு காண்ப்பிக்கிறது. ஆனால் யோபு 23:10 இல் கூறியபடி "ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்." ,என்பது தன் துன்பங்களுக்கு முடிவு உண்டு அதற்கு பின் மிக அருமையான ஒரு எதிர்காலத்தை தேவன் தனக்கு தருவார் என்பதில் நிச்சயம் உடையவராய் இருந்தார்.

இறுதியாக யோபு 19:25-27 வசனங்களில் "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது." என்று அறிக்கையிடுவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறித்த, நித்தியத்தை குறித்த ஒரு தெளிவான அறிவு அவருக்கு இருந்தது என்பதை காணலாம். எனவே நம் வாழ்விலும், நம் எல்லா பிரச்சனைக்களுக்கும் தீர்வு தேவனே. ஆம் தேவன் என்றென்றும் நம்மோடிருக்கிறார். எனவே எந்த பிரச்சனைக்கும் தீர்வாக அவரே இருக்கிறார். எனவே நாம் நம் கண்களை அவர்மீதே பதித்து வைத்திருக்க வேண்டுமே ஒழிய, பிசாசிற்கு இடம் தர கூடாது. தேவன் தாமே நம் கண்ணீர் யாவையும் துடைத்து நித்திய ஜீவகரையில் சேர்பாராக, ஆமென் அல்லேலூயா.

.